# திருக்கதவம் திறத்தல்

(உரை விளக்கம்)

சரவணானந்தா

# திருக்கதவம் திறத்தல்

(உரை விளக்கம்)

திருவருட்பா ஆறும் திருமுறையில்
உள்ள பத்து பாக்களுக்கு
சன்மார்க்க விளக்கம்.

திண்டுக்கல் அருட்பெருஞ்ஜோதி
தயவு ஆலயம் திறப்பு விழாவன்று
வெளியிடப்பட்டது.
(10—10—1983)

சரவணானந்தா


முதற் பதிப்பு - 1983.

அச்சிட்டு வெளியிடுபவர்:-

S.S. கிருஷ்ணமூர்த்தி,
தலைவர்,
சமரச சுத்த சன்மார்க்க சங்கம்,
நாகல் நகர், (வள்ளலார் நகர்)
திண்டுக்கல்-3.

விலை ரூ. 3-00

அச்சிட்டோர்:
ஸ்ரீ காளீஸ்வரி பிரஸ்,
கச்சேரித்தெரு, திண்டுக்கல்-1. போன்: 3745.



திரு அருட்பிரகாச வள்ளலார்

# சிறப்பு முகவுரை

**" அருளோங்கும் தண்ணமுதம் அன்பால் அருந்தி**
**மருள்நீங்கி நான்களித்து வாழப் - பொருளாம்**
**தவநேயர் போற்றும் தயாநிதியே எங்கள்**
**சிவனே கதவைத் திற. "**

(திரு அருட்பா)

என்று நம் திரு அருட்பிரகாச வள்ளலார், அருட் பெருஞ் ஜோதி சிவனை, நடராஜ பதியை வேண்டிப் பெற்ற பேறு, உலகுக்கு நன்கு வெளிப்படுத்த வந்தது, இத் **திருக்கதவம் திறத்தல்** என்னும் திருவருட் பாப் பதிகம். இதனை நம் சன்மார்க்க அன்பர்கள், அருட் பெருஞ் ஜோதிக் காட்சி பெறும் தருணம் கசிந்துருகி ஓதுகின்றனர்கள். இப்பாசுரங்களுக்கு விளக்கவுரை இருந்தால் நல்லது என வேண்டிக் கொண்டனர் பக்த அன்பர்கள் சிலர். திரு அருள் ஆணைப்படி அவ்வுரை விளக்கச் சிறு நூல் தக்க ஒரு சமயத்தில் வெளியாக்கப் பெறுகின்றது.

சன்மார்க்க நண்பர், திருநிறை S. S. கிருஷ்ண மூர்த்தி, திண்டுக்கல் - நாகல் நகரில் நிர்மாணித் திருக்கும் **அருட் பெருஞ் ஜோதித் தயவு ஆலயத் திறப்பு விழா** அன்று இத் **திருக்கதவம் திறத்தல்** என்ற நூல் வெளிவருகின்றது மிகப் பொருத்தமாகும். இதில், சுத்த சன்மார்க்கத்தின் உண்மையும் பெரும் பயனும் நன்கு அறிந்துகொள்ளலாம்.

மேற்படித் **தயவு ஆலயத் திறப்பு விழா** சிறப்பதற் குக் காரணம், நம் சன்மார்க்க சீலர் திருநிறை

பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் இத் திறப்பு விழாவோடு, சுத்த சன்மார்க்க "**தயவுப் பாக்கள்**" என்ற அரிய பெரிய ஒரு நூலையும் வெளியிடுகின்றார்கள், இத் தயவுப் பாக்கள், அருட் பிரகாச வள்ளல் மூலம் கிடைத்த **தயவு** என்னும் நிறை பொருள் மறை பொருளை முதலாகக் கொண்டு அவரது தயவு ஆணை கொண்டு ஆக்கி இத் தருணம் வெளியிடப் பெறுகின்றது. இதன் மூலம் சன்மார்க்க உலகம், நம் வள்ளற் பெருமானையும், அவரது சுத்த சன்மார்க்கத்தையும் நன்கு அறிந்து ஏற்று வாழ்வில் பெரும் பயன் பெறுவது சத்தியம்.

தயவினால் தான் இன்றைய உலகம், அகவுரிமை கொண்டு ஒத்து வாழ்ந்து ஆனந்தம் உறுவது திருவருள் ஆணை. சூழ்க அருட் பெருஞ் ஜோதித் தயவுப் பெரு நெறி.

சத்திய ஞான கோட்டம், இங்ஙனம்,
திண்டுக்கல். **தயவு சரவணானந்தா.**
10—10—83.

# திருக்கதவம் திறத்தல்
## (திருவருட் புகழ்ச்சி)

திரு அருட்பாப் பாடல்கள், சிறப்பாக சுத்த சன்மார்க்கத்தை உலகுக்கு வெளியிட்டு, மக்கள் சமுதாயம் முழுமைக்கும் நிலைத்த இன்ப வாழ்வை அடையச்செய்யவே வந்துள்ளனவாம்.

சுத்த நெறி என்பது, எவர்க்கும் உரிய ஒன்ருன அருள் ஆண்டவரின் அனுபவ வாழ்வை உலகுக்குக் கொண்டுவருவதாகும். இது எந்த ஒரு சமய மதச் சார்பு கொண்டதல்ல: பொதுவாக எல்லோராலும் தயவோடு ஏற்று, வாழ்க்கையில் பெருநலம் காண உதவுவதாம். இத்தயா பொது நெறி, வடலூர்ப் பெருமான் இராமலிங்க அடிகள் மூலம் வெளியாக்கப் பெற்றுள்ளது. இவரோ, அருட்பெருஞ்ஜோதிக் கடவுளையே, தமிழ் கண்ட சிவத் தொடர்பு கொண்ட சைவ மரபு வழி, மெய்ப் பொருளை உலகெலாம் உணர்ந்தோதி இன்புற உபாயம் செய்துள்ளார். ஆகையால் இவரது திரு அருட்பாக்கள் பெருவாரியாக சிவஜோதியோடு திகழ்கின்றன. சுத்த சத் விசாரத்தால் உண்மை கண்டு, உள் நின்று நிறை தயவால், யாவரும் வாழவே ஆணை செய்யப்பட்டு உள்ளதாம்.

எனவே, திரு அருட்பாப் பாசுரங்களுக்கு உட்பொருள் கண்டு உலகம் உய்வு பெற வேண்டியுள்ளது. இங்கு **திருக்கதவம் திறத்தல்** என்ற சிறந்த ஒரு பதிகம் விரிவுரை செய்ய எடுத்துக்கொள்ளப் படுகின்றது. இத்தலைப்புக்குக் கீழ் 'திருவருட் புகழ்ச்சி'

என்னும் குறிப்பு ஒன்றும் வழங்கப்பெற்றுள்ளது. இப்பதிகக் கருத்தினைப் புரிந்துகொள்வோம் முதலில்.

அனாதி நித்திய, அகண்ட பரிபூரண மெய்ப் பொருளே யாவரும் போற்றி அருட்பெரு நலம் பெற உள்ளதால் அப்பரம் பொருளே இங்கு அருட் பெருஞ் ஜோதியாக ஓதப்பெறுகின்றது. ஒவ்வொரு செய்யுளிலும் மகுடமாக, **'சித்த சிகாமணியே என் திரு நட நாயகனே'** என்று புகழப் பெற்றுள்ளது. அதாவது, அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர், திரு நட நாயகன் ஆக, நடராஜர் ஆகப் போற்றப்படுகின்றார். இந்த அருட் பெருஞ் ஜோதிபதி எழுந்தருளி இருப்பது சத்திய ஞான சபை ஆகும். இதன் திருமுன் உற்று நின்று தான், இப்பாசுரங்களை உருக்கமாக ஓதி வேண்டப்படுகின்றது. புறத்தே வடலூர் ஞான சபையும், துதிக்கப்படுகின்ற பாடல்களையும் பாமர உலகம் அறியும். உண்மையில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தனிப்பெருங் கருணையோடு எழுந்தருளி யுள்ளது நம் **உடலூரில்** சத்திய ஞானம் விளங்கும் தலைநடு இடமாகும். ஆதலின் புருவநடு மனம்ஒன்றி நின்று அகமுக நோக்கி வேண்டுதல் முறையாகும்.

இம்முறையிடு வேண்டுகையால் அருட் பெருஞ்ஜோதியைக் கண்டு, உள்ளொன்றி நிற்றல் தான் அருட்பதியின் அருள் பெற்றதற்கு அடையாள மாம். அப்படி அக நிலையில், கலவாமற் கலந்து இருந்துகொண்டு, அந்த அனுபவம் கெடாது அருட் பெருஞ்ஜோதியின் தனிப் பெருந்தயவால் வாழ்ந்து கொண்டிருப்பது தான் ஆண்டவரின் ஆணையும்,

மனிதப் பிறப்பின் முடிந்த ஆனால் முடிவற்ற நித்தியானந்த வாழ்வு நிலையும் ஆம்.

மேற்குறித்த லட்சியத்தை உளம் கொண்டு, இப் பத்து பாக்களின் விளக்கத்தை அருட்பெருந் துணையால் அறிந்து கொள்ளுவோம். பாக்களின் உபாய கற்பனை பொருள்களைக் கொண்டு, உள் விசாரத்தால் உண்மைப் பொருளையும் கண்டு, உட் கூடி உலைவற இருந்து கொண்டு நித்திய வாழ்வில் தயவு செய்துகொண்டு வாழ்வதே அனுபவத்தால் பெறும் பொருளாகும். மற்றபடி சொற்பொருளை வைத்துக்கொண்டு மகிழ்ந்தும், போராடியும் பொழுது போக்கிக்கொண்டிருத்தல் சரி அன்று.

இனி ஒவ்வொரு செய்யுளையும் எடுத்து ஆய்ந்துகொள்ளுவோம்.

(1)

திருக்கதவம் திறவாயோ திரைகளெலாம் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்ஜோதித் திருவுருக் காட்டாயோ
உருக்கிஅமு தூற்றெடுத்தென் உடம்புயிரோ டுளமும்
ஒளிமயமே யாக்குறமெய் யுணர்ச்சியரு ளாயோ
கருக்கருதாத் தனிவடிவோய் நின்னைஎன்னுட் கலந்தே
கங்குல்பகல் இன்றிஎன்றும் களித்திடச்செய் யாயோ
செருக்கருதா தவர்க்கருளும் சித்திபுரத் தரசே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

(விளக்கம்) அருள் ஐந்தொழிலாம் ஆனந்தத் திருநடணம் புரிகின்ற அரசே! நீ, ஆணவ அகங்கார மற்ற, அமைதியுளம் பெற்ற, பக்குவர்களுக்குத்

திருவருள் பாலிக்கவே, இந்தச்சித்திபுரம் என்னும் வடலூர் ஞானசபையில் எழுந்தருளியுள்ளாய். சித்தென்னும் மெய்ஞ்ஞான நிலைமேலே விளங்குபவனும், சித்தர் சித்தனும் சித்தனுதனுய் உச்சிமேற்கொள் ஒளிமணியாய்த் திகழ்கின்ருய். உன் திருச்சந்நிதி வந்து பணிந்து நின்று வேண்டுகின்றேன்" என்கின்ருர் வள்ளல் அடிகள்.

அவரது வேண்டுகை என்ன?

1. ஞானசபையின் வாயிற்கதவம் திறக்க வேண்டும்
2. அகத்தே ஒளிர் அருட்பெருஞ்சோதியை மறைத்துக் கொண்டுள்ள எல்லாத் திரைகளையும் விலக்கி நீக்கிவிட வேண்டும். அப்படிச் செய்து ஜோதிக் காட்சியை நன்கு காட்டி அருள வேண்டும்.
3. இந்தப் புறக்காட்சியோடு, அகத்தே அமுத ஜோதிப் பெருக்கால் உடலும், உயிரும், உள்ளமும் ஒளிமயமான உணர்ச்சி நிரம்பச் செய்தலும் வேண்டும்.
4. பிறவா, இறவா என்றும் விளங்கும் நினது ஒப்பற்ற அருட்ஜோதிவடிவை என்னில் இரண்டறக் கலந்து எப்பொழுதும் மகிழ்ந்திருக்கச் செய்தல் வேண்டும் என்றெல்லாம் விண்ணப்பித்துக் கொள்ளுகின்ருர்.

இவைகளை எல்லாம் அருள்வாயோ, வழங்குவாயோ எனக் கூறும்போது, நிச்சயம் அருள் செய்திடுவாய்! என்ற நம்பிக்கையின்பேரில்தான் ஐயவினுபோல் வெளித்தோன்ற உள்ளத்து உறுதி தொனிக்க வேண்டுகின்ருர் என அறியலாகும்.

இப்படி, கதவு திறத்தல், உள்ளொளி காட்டப் பெறல், அவ்வொளியோடு அத்துவிதமாய் நிறறல், அங்ஙனமிருந்து சதானந்தத்தோடு வாழ்தல் இவையே இவர்தம் வேண்டுகையின் பயனாகும்.

இதுபோல், நாம் ஒவ்வொருவரும் அப்படிச் சிற்சபாத்துவாரமாகிய புருவநடு, ஒருமையோடும் உளநெகிழ்வோடும் இருந்து வேண்டி வேண்டி உள்ளொளி கண்டு ஒன்றி நின்று அன்பருள் இன்ப வாழ்வு தழைக்க உலகிடை என்றும் விளங்குதல் வேண்டும் என்பதே அருட்பெரும்பதியின் திருவுள்ளமும் அருட்பிரகாச வள்ளற் பெருமானின் திரு ஆணையும் ஆம்.

(2)

மணிக்கதவம் திறவாயோ மறைப்பை எலாம் தவிர்த்தே
மாற்றறியாப் பொன்னேநின் வடிவதுகாட் டாயோ
கணிக்கறியாப் பெருநிலையில் என்னோடுநீ கலந்தே
கரைகடந்த பெரும்போகம் கண்டிடச்செய் யாயோ
தணிக்கறியாக் காதல்மிகப் பெருகுகின்ற தரசே
தாங்கமுடி யாதினிஎன் தனித்தலைமைப் பதியே
திணிக்கலையா தியஎல்லாம் பணிக்கவல்ல சிவமே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

(விளக்கம்) இச்செய்யுளின் முடிந்த கருத்தும் முன்னதையே குறிப்பதாகும். ஆனால் இதில், சொல் நயமும், அற்புத அலங்கார வாசக அமைதியும், உயர் பொருட்செறிவும் கண்டு கண்டு, ஓதி ஓதி பயன் கொள்ளத் தக்கனவாய் அமைந்துள்ளதை, ஆய்ந்து தெளிந்து கொள்ளவே சற்று விரிவுரை செய்யப்படுகின்றது.

இதில் நம் அருட்பெருஞ்ஜோதி நடன பதியைத் தான், சிவம் ஆக, எல்லாக் கலைகளையும், தன்னில் அருகி ஒடுங்கிக் கிடக்கச் செய்தும், காலகாலத்தே எக்கலையும் வெளிப்படுத்திப் பக்குவான்மாக்களின் சிக்கலை எல்லாம் அறுத்தொழித்து, அருள்பாலிக்கும் ஆண்டவர் ஆகவும் குறிப்பிடுகின்றார் நம் வள்ளற் பிரான்.

இதில் வந்துள்ள வேண்டுகையும் முன் போன்றதே எனலாம்: வண்ணமும் வனப்பும் வேறானாலும், சுட்டும் பொருள் வேறாவதில்லை.

மணிக்கதவம் திறக்க வேண்டப்படுகின்றது முதற்கண். இது, மன்னேன்மணியொளிர் நுதற்கண்ணைத் திறக்கப் பெறுதலேயாம். தயா குருவின் அருளாலேதான் இக்கண் திறக்கப்படுவது. அந்த குருவும் உள்வளர் அருட்பெருஞ்ஜோதியே ஆகும். இதுவே எவர்க்கும், எக்காலத்தும் சொந்த குருவாம். இந்த மணிக்கதவம் திறக்கப் பெற்றுக் கொண்டால், உள்ளொளிக்கும் நமக்கும் இடையில் இல்லாதே இருக்கும் மாயா மறைப்புத்திரைகள் யாவும் ஒழியும். அப்போது, உள்ளோங்கு அருட்பெருஞ் ஜோதியின் மாற்றறியா பொன்னொளிக் காட்சியால் மாட்சி பெறுவோம்.

என்ன மாட்சி, என்றால், தனிப்பெருங்கடவுளின் பெருமை எந்த விதத்திலும் அறியக் கூடாததாய் உள்ளதை, அதோடு கலந்து நின்று அனுபவிப்பதால் மட்டும் உணரக்கூடிய பேரனுபவப் பெரும்போகமாய்

இருக்கின்றதாம். அவ்வனுபவத்தை இப்போதே எனக்கு அருள்வாயாக. ஏனெனில், இது சமயம் அந்தப் பேரின்பப் பேராசையாம் தெய்வக் காதல் என்னில் பெருகிப் பொங்கி எழுகின்றது; இதனை என்னால் அடக்கவும் முடியாது! தாங்கவும் முடியாது!! ஆகவே, எனக்கு இப்பவே கருணைபாலி, தயவு செய். அப்படிச் செய்யத் தனித் தலைமைப் பெரும்பதி ஆகிய உன் ஒருவனால் மட்டும்தான் முடியும் என்பதை நின் தனிப்பெருந்தயவே உணர்த்த உணர்ந்து கொண்டிருக்கின்றேன்.

மற்றபடி நின் தனிப்பெருங்கருணையால் பெற வல்ல எந்த ஒரு சித்திப்பேறும் கலாவல்லப சித்தி வாழ்வும் நான் விழைகிறேனில்லை.

இப்படித்தான் நாமும் அகஞான சபைக்கண் உற்று அருட் பேரின்பப் பேறு பெற்று வாழ வேண்டும் என்பதே திருவுள்ளமாம்.

(3)

**உரை கடந்த திருவருட் பேர் ஒளிவடிவைக் கலந்தே**
**உவட்டாத பெரும்போகம் ஓங்கியுறும் பொருட்டே**
**இரைகடந்தென் உள்ளத்தே எழுந்துபொங்கித் ததும்பி**
**என்காதற் பெருவெள்ளம் என்னைமுற்றும் விழுங்கிக்**
**கரைகடந்து போனதினித் தாங்க முடியாது**
**கண்டுகொள்வாய் நீயேஎன் கருத்தின்வண்ணம் அரசே**
**திரைகடந்த குருமணியே சிவஞான மணியே**
**சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.**

(விளக்கம்) இது வாயிலுக்கு புறம்பிருந்து வேண்டினது அல்ல, கதவு திறந்து உட்சென்று, திரைகளும்

நீக்கப்பட்ட நிலையிலே, கண்டதும், விண்ணப்பித்துக் கொண்டதும் ஆகும்.

இதில் நம் அருட்ஜோதிப் பெரும்பதி திருநடன சபேசராக, சித்தர் சிரோ ரத்தினமாக, சிவஞான மணியாக, அருட்குரு மணியாகக் கண்டுகொள்ளப் படுகின்றார். இதன் முறையிட்டு விண்ணப்பத்தில், நம் பதியுனுடைய பெருஞ்ஜோதி சொரூபம் வாய்ச் சொல்லால், இப்படியுள்ளது என்று கூறவே முடியாத சொற்கடங்காப் பொருளாகச் சுட்டப்படு கின்றது முதலில். அந்த ஜோதி சொரூபத்தில் பிரிவற ஒன்றி இருந்துகொண்டு, என்றும் சலியாத உலவாத இன்பிலே தழைத்து ஓங்கி விளங்க வேண்டுகின்றார்.

இவரது உள்ளத்தில், இறை கடந்த நிலையில், அதாவது பரநாதமாகிய ஒலி எல்லைக்கு அப்பால் விளங்கும் ஜோதிப்பெருக்கு தோற்றுகின்றது. அவ் அருட் ஜோதிப் பெருக்கு என்னும் கடவுட் காதல், கடல்மடை திறந்தாற்போல் புறப்பட்டுத் தலைக்குமேல் எழுந்து, தன்னை முழுமையாக விழுங்கிவிடும்போல் விரைகின்றது என்கின்றார். "அது கரைகடந்து பாயத் தொடங்குகின்றது, ஆகையால் இனியும் தாங்கமுடியாது, அடியேனேன் உள்ளத்தை அறிவாய் நீயே! ஆட்கொண்டு அருளல் வேண்டும் இன்னே!" என மிக உருக்கமாகக் கதறுகின்றார்.

இவ்வளவும் திரையற்ற ஜோதி இறைமுன் இருந்து இசைத்த விண்ணப்பமாகும்.

அப்படி நாமும் அதிதீவிரமாய் முயன்று, உள்ளொளி கண்டு உருகி வேண்டிக் கொண்டால், திருவருள் உவந்தளிக்கப் பெறுவோம். எல்லாம்வல்ல அருட்பரம்பொருளே இத்தருணம், யாவரும் தம் தம் உள்ளமாகிய ஞானாலயத்தில் விளங்கும் அருட்பேரொளி ஆண்டவராகக் கண்டும், அவரையே அருட் பெருங் குருவாகக் கொண்டும் ஆனந்த வாழ்வைப் பெற்று உய்வோமாக.

(4)

உன்புடைநான் பிறர்போல உடுக்கவிழைந் தேனோ
உண்ணவிழைந் தேனோவே(று) உடைமைவிழைந் தேனோ
அன்புடையாய் என்றனைநீ அணைந்திடவே விழைந்தேன்
அந்தோஎன் ஆசைவெள்ளம் அணைகடந்த தரசே
என்புடைவந் தணைகஎன இயம்புகின்றேன் உலகோர்
என்சொலினும் சொல்லுகஎன் இச்சைஎலாம் விடுத்தேன்
தென்புடையோர் முகநோக்கித் திருப்பொதுநிற் கின்றோய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

(விளக்கம்) பொதுவாக உலகியல் மக்கள் தெய்வ நம்பிக்கையும், பக்தியும், புலன் இன்ப வாழ்வில் பேராவலும் உடையவர்கள் ஆவர். இவர்கள் எல்லாம் நம் ஞான சபா அருட் ஜோதிமுன் உற்று என்ன வேண்டுவார்கள்? சுகபோக வாழ்வுக்காம் இடம் பொருள் ஏவல்களையே மிக விரும்பி வேண்டிக்கொள்ளுதல் இயல்பு. அப்படி இல்லை நம் அடிகள். ஆகையால், உன்புடை நான் பிறர் போல உடுக்க விழைந்தேனோ? உண்ண விழைந்தேனோ? வேறு, உடைமை விழைந்தேனோ? என வினவாக முறையிடுகின்றார். அதாவது, இவர் மற்றவர்களைப்

போல உண்டு, உடுத்து, உடைமை கொண்டு களித்து இருக்க விரும்பவில்லை என்பது கருத்தாம்.

" அன்புடையாய் என்றனை நீ அணைந்திடவே விழைந்தேன் " என்று தன் குற்றமற்ற இச்சையைக் குறிக்கின்றார். இப்படி யார், தெய்வத்தின் முன் உற்று, அத்தெய்வத்தையே பெற்று, அதன் மயமாகி விட வேண்டிக்கொள்ளுகின்றார்கள்? ஆண்டவரோடு இணைந்து அவர் மயமாய் வாழ எவர்தான் வரம் வேண்டுகின்றனர்? அப்படி இதுகாறும் யாரும் வேண்டவுமில்லை! பெறவுமில்லை!! இந்தப் புதுமையான கோரிக்கைதான் நம் பெருமானாரின் வேண்டுகை. இவ்வேண்டுகையே பெரும் வேட்கையாகி, ஆவற்பெருக்காகி அணைகடந்துவிட்டது என்று இறைமுன் இசைத்து நிற்கின்றார்.

இந்த, உய்யும் நெறி முறையை எல்லாம் உலகவர்க்கு, இதம் பதமாக எவ்வளவோ எடுத்துச் சொல்லிச் சொல்லி, தன்பால் வந்து சேரும்படி அழைக்கின்றார், அருட்பிரகாச அடிகள். இவரது உரைகளை உலகத்தார் எப்படி வேண்டுமானாலும், மதித்துக்கொண்டாலும், மதியாவிட்டாலும் சரி. "எந்த ஓர் ஆசையும் இல்லாமல் வெளியிடுகின்றேன்," என்று விண்ணப்பித்துள்ளார்.

இந்த விண்ணப்ப முறையீடு, தென்முக நோக்கிய சத்திய ஞானப் பொதுவாம் திருச்சபை முன் இருந்து வெளிப்படுத்துகின்றார் நம் வள்ளலார். தென்திசை நோக்கியுள்ள அருட் பெருஞ் ஜோதி நடனபதியை வணங்கி வழிபட்டு நிற்கும் ஒருவன்,

அத்திருச் சந்நிதியில் வடபால் நோக்கி, வளர் ஒளி யின் சேர்க்கை பெற விண்ணப்பஞ் செய்து கொண்டு, ஜோதிபதியை பார்ப்பற பார்த்து நிற்கின் ருன். இது சமயம், அந்த அருட் ஜோதி, இவனைத் தன்பால் ஈர்த்துக்கொள்ளுகின்றது: இதற்குப் புற வான் வெளிஒளிர் வடதுருவ நட்சத்திரமும் அத் திசையில் ஒருவனது உடலுயிர் ஆற்றலையும் இழுத்துக் கொண்டிருப்பதால் வெகு விரைவிலே அருட் சுடரின் இணைப்பு கைகூடுவதாகிவிடுகின்ற தாம்.

இந்தத் தென்முக நோக்கின் சிறப்பு உண்மை யை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பெற்றதே, நடராஜர், தெக்ஷிணா மூர்த்தி முதலியவற்றின் தத்து வம் ஆகும். மரணமில்லா வாழ்வு பெறுவதற்கு இவ்வகை தெய்வீக வழிபாட்டு முறை பொருந்துவ தாம். புற விளக்கங்களைத் துணை கொண்டு, அக உண்மையைக் கண்டு அடைந்து அனுபவ சித்தி பெறல் திருவுளக் கருத்தாம்.

(5)

**இறந்திறந்தே இளைத்தவெலாம் போதுமிந்த உடம்பே**
**இயற்கையுடம் பாகவருள் இன்னமுதம் அளித்தென்**
**புறந்தழுவி அகம்புணர்ந்தே கலந்துகொண்டெந் நாளும்**
**பூரணமாம் சிவபோகம் பொங்கியிட விழைந்தேன்**
**பிறந்திறந்து பொய்க்கதியைப் பெறநினைத்தே மாந்த**
**பேதையர்போல் எனைநினையேல் பெரியதிருக் கதவம்**
**திறந்தருளி அணைந்திடுவாய் சிற்சபைவாழ் அரசே**
**சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே,**

(விளக்கம்) பெரிய திருக்கதவம் திறந்து அருளவும், புறமொடு அகமும் கலந்து கொண்டு, இறவா வரத்தோடு இனிது மகிழ்ந்து என்றென்றும் வாழ்ந்திட வேண்டப்படுகின்றது இப்பாடலில்.

இதுகாறும் இந்த ஆன்மாவுக்குத் தான், எத்தனை எத்தனை பிறவிகள் சூழ்ந்து சூழ்ந்து, வருத்திச் சென்றனவோ யான் அறியேன்! அப்படிப் பட்டுப் பட்டு வருந்தி மாய்ந்து போனதை எண்ணிக் கலக்க மடைகின்றேன் இப்போது. இனியும் அப்படிப் பிறக்கவும், அவத்தைப்பட்டு அழியவும் சிறிதும் இசையேன். போதும் அந்த அவலப் பிழைப்பு. எனவே இப்போது யான் ஏற்றுள்ள இந்த உடம்பை யே, இயறகையுடம்பாக மாற்றி எழிலச் செய்திடல் வேண்டும் என்கின்றார் எம்பெருமானார்.

இவர் வேண்டும் இயற்கை உடம்பு என்பது எது? இப்போது ஒருவன் ஏற்றுள்ள புற உடம்பு இயற்கை அல்ல; இத் தூல வடிவுக்குள் விளங்கும், சூக்கும நுண்ணுடலும் கூட இயற்கையுடம்பாகாது. இவை இரண்டுமே அழிவுறும் தன்மையனவாம். இயற்கை யான ஒன்று அழிவற்றது, அது தெய்வீக இயல் கொண்டதாம். அதுவே காரண தேகம் எனவும், ஆன்மா எனவும் கூறப்படுவது. இக்காரண ஆன்ம சிற்றுரு, கடவுட் பேருருவின் உண்மையைக் கொண்டு இருக்கும் ஒன்றாகும், இவ் ஆன்மாவில் மறைந்து இருந்து, பக்குவ காலத்தே சுத்த அருள், அமுத ஜோதியாக வெளிப்பட்டு, தூழ் உருவையும் சுத்த உடம்பாக ஆக்கிவிடுவதாம். இப்படி ஒருவன்

சுத்த ஆன்ம காரணவடிவினன் ஆகி, அருள் அனுபவ வாழ்வு கொண்டு விளங்கும் போதுதான், உண்மை முத்தி நிலை எய்தியவன் ஆகின்ருன். இதுதான் ஒருவன் **இயற்கை எய்திஞன்** என்பதன் உண்மையாம். மற்றபடி சாதாரணமாக இறந்துபோன ஒருவனை இயற்கையை எய்திஞன் என்று சொல்லுவது உண்மை அல்ல!

மரணத்தையொழித்து, அமரத்துவம் அளிப்பது அமுதம் என்பர். அதுவும் அருட்பெருஞ் ஜோதி அமுதம் அகமிருந்து அனகம் உற்று அனுபவப்படுவதால் மட்டும் ஒருவன் திரிதேக சித்தியோடு பேரின்ப முத்தி வாழ்வு வாழ்கின்றவனுவான். ஈதல்லாது உலகியல் சித்த மார்க்கத்தில் கண்ட எந்த அமுதமும் யோகானுபவத்தில் பெறப்படுகின்ற குண்டலிப்பால் அமுதும், மற்ற வகையால் கிடைக்கப்பெறும் கல்ப தேக சித்தி தரும் அமுதங்களும் நம் அருட்பெருஞ் ஜோதி அமுதுக்குச் சிறிதும் நிகராகாது.

இந்த அருள் அமுதத்தைத் தான் நம் அருள் அடிகள் வேண்டுகின்ருர். இவர் பாடும் சிற்சபை முன்னேர் கண்ட பூர்வ ஞான சிதம்பர சிற்சபையினும் பெருமையுடையதாகும். அன்று, "இறவா வரம் தரு நற்சபையே, என மறை புகழ்வது சிற்சபையே," எனப் போற்றப்பட்ட ஒன்ருல், மனிதன், காரண தேக நிலையில் இருந்து கொண்டு பிறவாதே இறவாதே மறைந்து கிடப்பதே இறவா வரமாக எண்ணி இறுமாந்து போஞன்.

அப்படி ஆன்ம வடிவில் அருவமாய், இல்லாதே

இருக்கும் வாழா நிலையை விரும்பிடவில்லை நம் வள்ளற்பெருமான். ஆகவேதான், அருட் பெருஞ் ஜோதி நடனபதி எழுந்தருளித் திகழ்கின்ற சத்திய ஞான சபையாம் சிற்சபை வாழ்வால் அழியாப் பேரின்பப் பெருவாழ்வை உலகுக்கு அறிமுகப்படுத்து கின்றார். இச் சிற்சபையின் வாயில் பெரிய திருக் கதவம் எனப்படுகின்றது. இதன் மூலம் அடையப் பெறுவது பெரு முத்தி சித்திப் பெருவாழ்வு ஆகும்.

இதனால், இதுவரை கொண்டிருந்த அருஞ்சமய மத நெறியெல்லாம், சுத்த சன்மார்க்கப் பெருநெறி முன், சிறு நெறிகளாகவே தோற்றுகின்றனவாம். இவ் அனகப் பெரு நெறியால், அகமிருந்த அருட் பூரண ஜோதி அமுதம், அவ்வக நிலை நின்று எழுந்து தேகநிலை எல்லாம் கடந்து அகண்டமாய் நிரம்பி விடுகின்றதாம். இதனையே, அகம் புணர்ந்து புறந் தழுவி கலந்து கொண்டு பூரணமாய் என்றும் விளங்கும் சிவபோக நிலையாக குறித்துள்ளார் இப்பாடலில்.

இந்த மரணமில்லாப் பேரின்பப் பெரு வாழ்வு ஒன்றே இவரது முடிந்த குறிக்கோள். மற்ற மற்ற பலவாகிய சித்திப் பேறுகளைப் பெற்று முடிவில் பொய்த்து ஏமாந்து போவது பேதமை என்பதே இவருடைய கருத்தாகும்.

ஆகவே, பெருநெறி ஒன்றையே கடைபிடித்து ஒழுகி, உலகவர் எல்லாம் உலவா இன்பில் தழைத்தி டச் செய்யவே பெருநெறி வகுத்து வழங்கிப் பெரிய

திருக்கதவமும் திறந்து வைத்துக் கொண்டு எல்லோரையும் வம்மின், வம்மின், பேரின்பப் பெருவாழ்வு பெற வம்மின் வம்மின் என்று அழைத்துக் கொண்டிருக்கின்றார். எங்கே? நமது உடலூர் உள்வளர் உண்மைச் சத்திய ஞான சபைக்கே அழைக்கின்றார். தயா ஒழுக்கமும், தயா விசாரமும் கொண்டு அகம் அடைதல் வேண்டும். அடைந்து விட்டால், அங்கிருந்து அனகமாக வாழலாம் ஆனந்தப் பெருவாழ்வு.

(6)

பொய்யுடையார் விழைகின்ற புணர்ச்சிவிழைந் தேனோ
 பூணவிழைந் தேனோவான் காணவிழைந் தேனோ
மெய்யுடையாய் என்னொடுநீ விளையாட விழைந்தேன்
 விளையாட்டென் பதுஞானம் விளையும்விளை யாட்டே
பையுடைப்பாம் பணையரொடும் ஆடுகின்றோய் எனது
 பண்பறிந்தே நண்புவைத்த பண்புடையோய் இன்னே
செய்யுடைஎன் னொடுகூடி ஆடஎழுந் தருள்வாய்
 சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

(விளக்கம்) சித்த சிகாமணி ஆகிய நடராஜ பதியாம் அருட் பெருஞ் ஜோதி முன் உற்று இருந்து கொண்டு, இப்படிப் பலவாகத் தன் உள்ளக்கிடக்கையை வெளியிட்டு வேண்டிக்கொள்ளுகின்றார் இராமலிங்கப் பெருமான்.

உலகில் பொய்யுடையார், அதாவது மாயா தேகத்தோடு கூடிய பொய்யான புலபோக இச்சையுடையவர்களே ஆவர். அவர்கள் விரும்புவதெல்லாம் அற்ப சேர்க்கை இன்பமே. அதற்கானவர்களையும், அழி பொருள்களையும் மிக இச்சிக்கின்றார்

களாம்: அப்படி ஒன்றும் தான் விரும்பவே இல்லை என்று பொருள்படக் குறிக்கின்றார் முதலில். அத்தோடு வான்காண விழைந்தேனே! என்கின்றார். வான் என்ற சொல் சிறப்பு, அழகு என்ற கருத்தில் கையாளப்பட்டுள்ளது ஈண்டு. அதனைத் தான் விரும்பவில்லை, என்பதையே யுணர்த்துகின்றார்.

இவர் உண்மையில் விரும்புவது என்ன? என்றால், அந்த சத்திய ஞான ஜோதி சொரூபி ஆகிய பதியே தன்னோடு விளையாட வேண்டும் என ஆசைப் படுகின்றார் ஆம். இந்த விளையாட்டு, சிறு பிள்ளை விளையாட்டோ, அல்லது பொழுது போக்குநர் ஆடும் ஒரு விளையாட்டோ அல்ல. விளையாட்டு என்பது, ஞானம் விளையும் விளையாட்டே என்று அடுத்து எடுத்துக் கூறித்தெளிவுபடுத்திவிட்டுள்ளார். ஒருவன் இந்த உலகில் தோற்றுவிக்கப்பட்டுள்ளதின் காரணமே, நல்லொழுக்கம் பயின்று, நல்ல வழக்க பழக்கங்களால் நல்ல அறிவும் அனுபவமும் அடைந்து முடிவில் இறை இன்ப வாழ்வு பெற வேண்டும் என்பதேயாம். இந்த இறையாணையை உளங்கொண்டு தயா இயல் வாழ்வு வாழ்வதே உண்மை விளையாட்டாகும். இதனால், விளையாட்டே மெய் விளைவாகும் என்பது அனுபவம். இதனை உலகர் 'விளையாட்டே வினையாகும்,' என்று மாறுபடக் கொள்கின்றனர். கடவுளின் திருவிளையாடல், லீலை, லீலா விநோதச் செயல் என்பனவெல்லாம் ஞானானுபவ லட்சியச் செயலேயாகும்.

கடவுள் எல்லோரையும்தான் பண்பாடடையச்

செய்தற்பொருட்டே, தோற்றுவித்து, வினைப்போகங்களை முறைப்படி ஊட்டி, வளர்த்து வருகின்றார். பையுடைய பாம்பு அனையர், அதாவது, சிலர் நச்சுப் பையுடைய படநாகம் போன்ற தன்மையராய்ப் பலர்க்கும் அச்சத்தையும், தீங்கையும் விளைவிப்பவர்களாயுள்ளனர். அப்படிப்பட்டவர்களின் உள்ளிருந்தும், ஆடிக்கொண்டும், அவர்களை ஆட்டிவைத்துக் கொண்டும் இருக்கின்றார் ஞான நடனபதி. நல்லோர்களின் நற்பண்பினைக் கண்டு, நெருங்கிய நட்பு காட்டி நலம் வழங்கி வருகின்றார். அப்படிப்பட்ட நட்பு உறவு நம் வள்ளலார் பால் கொண்டுள்ளதை நன்கு உணர்ந்தே கூறுகின்றார். தன்னோடு இன்னே, இப்போது கலந்து கொண்டு தெய்வ நடம் ஆடும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றார்.

'செய்யுடை என்னொடு கூடி, ஆட எழுந்தருள்வாய்,' என்பதன் பொருள். ஆனந்தானுபவம் உண்டாம்படி, இந்தச் செய் என்னும் மண்ணுலகில், மண்ணுடம்பிலே கலந்து, பொன்னுடம்பாக ஆக்கிக் கொண்டு ஆனந்தத் திருநடனம் புரிந்துகொண்டிருத்தல் வேண்டும் என்பதுதான் வள்ளலார் விழைவு ஆம்.

இந்த ஆனந்தானுபவ வாழ்வு தான் ஆதியிலேயே மனிதனுக்கு விதிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால், இந்த ஆன்மாவின் பரிபாக நிமித்தம், எத்தனை பிறவிகளில், எப்படி எப்படி எல்லாம் ஆட்டி வைக்கப் படுகின்றான் இந்த மனிதன். முடிவாக இப்போது தான், ஆன்ம அகமுடையான், தன்னை முற்றிலும்

இவனில் நிறைத்துக்கொண்டு, வெளி நிரம்ப உள்ள ஆன்மாக்களுக்கெல்லாம், நித்திய இன்பானுபவத்தை விளைவித்துக்கொண்டு திகழத் திருவுளம் கொண்டு வெளிப்படுகின்றது உண்மை.

(7)

கூறுகின்ற சமயமெலாம் மதங்களெலாம் பிடித்துக்
கூவுகின்ற பலன்ஒன்றும் கொண்டறியார் வீணே
நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார் அவர்போல்
நீடுலகில் அழிந்திடவே நினைத்தேனோ நிலைமேல்
ஏறுகின்ற திறம்விழைந்தேன் ஏற்றுவித்தாய் ஆங்கே
இலங்குதிருக் கதவுதிறந்(து) இன்னமுதம் அளித்தே
தேறுகின்ற மெய்ஞ்ஞான சித்தியுறப் புரிவாய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

(விளக்கம்) இதிலே, சமய மதங்களிலே விவாதிக்கப்படுகின்ற விதிமுறைகளின், கொள்கை கோட்பாடுகளின் நற்பலனற்ற விளைவு பேசப்படுகிறது. இவர்கள் (தம்தம்) மதம் பிடித்துக் கூவுகின்றார்களாம். இறை அனுபவ வாழ்வாம் பலனைப் பெறாது வீண்போய் விடுகின்றார்களாம்.

பழைமையாகத் தோன்றி அழியாது விளங்கிக் கொண்டுள்ள சமயங்களும், மதங்களும் தெய்வீகமானவை எனவும், அவற்றின் மூலமாகத்தான் மக்கள் இனம் உய்வு பெற முடியும் எனவும் கருதப்பட்டன, இன்னமும் கருதப்படுகின்றன. மதம் இல்லையேல் மக்கள் மாக்கள் ஆகிவிடுவார்கள் என்றும் கருதப்பட்டது. இவற்றின் உண்மையும், விளைவுகளும், இத்தருணம் அருட் பெருஞ் ஜோதி வெளியில் நன்கு அறிந்துகொள்ளப்படுகின்றன.

முன்னெறிகள் எல்லாம் மனிதன், அழிந்துபடும் உடல் வடிவினனே எனவும், கடவுள் மட்டும் அநாதி நித்திய ஆனந்த வடிவினன் எனவும் ஏகதேச அருளால் கண்டு, அக்கடவுளை அடைந்து இன்புற்றிருக்கவே வழிகாண முயன்றனர் ஆன்றோர் பலரும். நம் வேதாகம முடிவுகளும், பாசபந்த உலக வாழ்வை உதறிவிட்டுப் பதிக் கலப்பில் ஐக்கியமாகிப் போவது அல்லது பிரம்மானந்தத்தில் மறைந்து விடுவது தான் முடிவாகக் கொண்டிருந்தனர். மண்ணுலகத் தற்காலிக வாழ்வை நீக்கிவிட்டு விண்ணுலகை அடைந்துவிடுவதே பெரும் பேறாக எண்ணினர் முன்னோர் பலர். இப்படிப்பட்டவர்கள் மூலம், பகுத்தறிந்து, வகுத்து, தொகுத்து வழங்கப் பட்டனவே தெய்வ நெறிமுறை பலவும்,

நித்திய சத்திய மெய்ப்பொருள் இந்த மாபிரபஞ்சத்திற்கு ஒருவரே என்பதும், அவரே உள் ஏகமாய் இருந்துகொண்டே புறத்து எல்லாமாய், அனேகமாய்த் தோற்றுவதும் மறைவதுமாய் உள்ளார் என்றும் இத்தருணம் அப்பதி தயவால் உணர்த்தப் பெறுகின்றோம். அதனால், அவர்தானே, உண்மையில் முன்னும், இன்றும், பின்னும் ஒவ்வொருவருமாய் விளங்குவது முற்றும் மெய்யே எனவும் அறிகின்றோம். இதனால், மனிதன் கடவுளுக்கு அன்னியன் அல்ல, இவன் தேகம் 'தான்' என்ற பற்றால், கடவுளுக்கு அயலாகத் தன்னைக் கருதுவது, தவறே எனவும் அறியப்படுகின்றது. அப்படித் தவறான எண்ணத்தால் தான், தான் அநித்தியன் எனவும், கடவுள் ஒருவரே

நித்தியர் எனவும் கொள்ளப்பட்டது எனவும் தெளிவு றுகின்ருன். இத்தெளிவு கொண்டு உணரும்போது சுத்த சத் விசாரத்தால் தேகப்பற்று நிலை கடந்து, உள் விளங்கும் நித்திய கடவுள் நிலை சார்ந்து நின்று, தயவால், வாழ்வதால், அந்த அக நித்திய இறை மய இயல்பு உணர்வில் நிரம்பி, உயிரிற் சார்ந்து, உடலிற் கலந்து, இறை அனுபவத்தோடு என்றும் வாழ்ந்து கொண்டிருக்க உதவுகின்றது வள்ளல் கண்ட உண்மை அனுபவமாகும். இப்படி கடவுள் நிலை கண்டு கலந்து வாழும் முறையே எவர்க்கும் நித்தியானந்த வாழ்வை அகமிருந்து அனகப்படுத்துவதாய் இருக்கின்றதாம். இந்த வாழ்வு பெறு முறையே சுத்த சன்மார்க்கம், அனக நெறி வாழ்வு என்று வழங்கப்பெற்றுள்ளோம். இதன் மூலம் உலக மக்கள் சமுதாயம் உய்வு பெறுவது நிச்சயம். இதனுல், பழைய நெறிகளைக் கொண்டு பயன் ஒன்றும் அடைய முடியாது என்பது திண்ணம். அதற்கு இன்றைய உலக நிலையே கண்கூடு. இதனுல்தான் இங்கு இச் செய்யுள் முதல் அடியில், சமய மதக் கொள்கைகளையும், அவற்றைக் கொண்டு, வழக்கும், வாதமும், சண்டையும், சச்சரவும் செய்து வீண் போவதை எல்லாம் சாடுகின்ருர் நம் பெருமான்.

அருள் அமுத நெறி சார்ந்து அழியா இன்ப வாழ்வடையாதார் எல்லாம் அழிந்து மண்ணுகி, நாறிக் கெட்டுப் போகின்ருர்களாம். அவர்களைப் போல்இவர் அழிந்து ஒழிய நினைக்கவில்லை என்பதை

அமுதம் திருத்தமாக எடுத்துக் கூறுகின்றார். இவர் இதுவரை யாரும் ஏரு நிலை மிசை ஏற விழைந்தார். அப்படி ஏறற்கான பேராற்றலைத் தந்து அப் பெருநிலை மேலே, ஏற்றிவிட்டுள்ளார் அருட் பெருஞ் ஜோதி நடனபதி. இந்த அருட்பெரும் மேனிலை இருக்கிறதே இதனை புறத்திருந்து எவராலும், எக்காலத்தும், எவ்விதத்தும் அடைந்துவிட முடியாது. எனெனில், அம்மேனிலை, ஆண்டவர் விளங்கும், தீண்டப்படாத உயர் நிலையாகும். அருள் மயமானோர்தான் தம்மையும், அவ்வாண்டவரோடு பிரிவற இருப்பதை யுணர்ந்துகொள்ள முடியும். அவர்களே அம்மேனிலை மேல், ஏருதே ஏறி இருப்பவர்கள் ஆவர். மற்றபடி அந்நிலை அடைதல் முடியாதாம். முன்னெறியாளர் பலரும், அருள் நிலையுற்று ஆண்டவர் மயமாகி விளங்காத காரணத்தால், அந்நிலையுருதவர்களே ஆவர். அவர்கள் வாழ்வற்று வீண்போய்விட்டர்கள்.

நம் அருட்பிரகாசர், விசார முறையால் திருமுன் உற்று வேண்டிக் கொண்டதால், திருக்கதவம் திறக்கப் பெற்ருர். அருட்ஜோதி இன்னமுதமும் வழங்கப்பெற்ருர்! "அருட் பெருஞ் ஜோதியைக் கண்டேனே ஆனந்தத் தெள்ளமு துண்டேனே," என்று கூறிப் பரவசப்படுகின்ருர். மற்ற மற்ற யோக ஞான மார்க்கங்களில் சென்று அடைந்த அமுத சக்தியால் பிறர் பெற்ற சித்திகளைத் தான் உலகம் புகழ்ந்து கொண்டாடிக் கொண்டுள்ளது இது வரை. இவர் ஏற்ற அமுதம், சாதாரண அற்புத சித்திகள் செய்ய மட்டும் உதவுவதல்லவாம். அச் சித்திகளை

இச்சிக்கவும் இல்லை இவர். இவர் வேண்டுவது மெய்ஞ்ஞான சித்தியாகும்.

மெய்ஞ்ஞான சித்தி என்றால் என்ன? சத்திய ஞானத்தால் கடவுள் உண்மையை உள்ளபடி அறிந்து கொண்டு, அவர் மயமாய் அழியா இன்போடு என்றும் வாழ்ந்து கொண்டிருப்பதேயாகும். இது தான் மெய்ஞ்ஞான சித்தி என்கின்றார். இந்த சித்திப் பேற்றினையே, இப்பாடல் மூலம், சித்த சிகாமணியாம் அருட் பெருஞ் ஜோதி நடன நாயகரிடம் வேண்டிப் பெற்றுக்கொள்ளுகின்றார்.

நாமும், இனி பழநெறி பற்றினை எல்லாம் விட்டு சுத்த தயவு நெறி கொண்டு, அருட் பெருஞ் ஜோதி சித்தியை அடைய வேண்டுவதே அவரது திருவுள்ளமும் ஆணையுமாம்.

சத்திய ஞான சபைத் திருக்கதவம் திறக்கப் பெற்று திரைகளை எல்லாம் விலக்கப் பெற்று, அருட் பெருஞ்ஜோதியைக் கண்டு கலந்து அதுவாகி நிற்க வேண்டியது முதல் கூறு. பின்னர், அவ்வகநிலை நின்று தேக போகப் பற்றற்று, திருவருளால் வழங்கப் பெறும் இடம் பொருள் ஏவல்களைத் தயவோடு இயன்றபடி, இயன்ற சூழ்நர்க்கு வழங்கி வரல்வேணடும், அப்படிச் செய்து கொண்டிருந்தால் அந்த அக ஜோதியே, தயவு வண்ணமாகி விரிந்து நம்மில் நிறைந்து திரிதேக சித்தியோடு வாழச் செய்வது சத்தியம். வழங்குவோம் தயவு.

(8)

வேதநெறி ஆகமத்தின் நெறிபவுரா ணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூது(அ)னைத்தும் உளவனைத்தும் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணரஉணர்த் தினையே
ஏதமற உணர்ந்தனன்வீண் போதுகழிப் பதற்கோர்
எள்ளளவும் எண்ணமிலேன் என்னோடுநீ புணர்ந்தே
தீதறவே அனைத்தும்வல்ல சித்தாடல் புரிவாய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே;

(விளக்கம்) கடவுள் உண்மை பற்றி வேதங்களும் ஆகமங்களும் சொல்லியுள்ளனவெல்லாம் சாதாரண மக்களே பகுத்தறிவால் முழுமையாக புரிந்து கொள்ள, முடியாது. ஏனென்றால், சொற்பொருளுக்கும் கற்பனைகட்கும் அப்பாற்பட்டது பரம்பொருள். அது சுத்த அருள் அல்லது தயவு மயமானது, சச்சிதானந்த நித்திய வஸ்து, எல்லாம்வல்லது, என்று அருள் அநுபவத்தால் கண்டு, அனுபவித்தவர்கள் சொல்லுகின்றனர். ஆகையால் நாமும் அம்மேனியை பெற்று அருள் ஜோதி மயமாகி இருந்தால் தான் அக்கடவுள் அனுபவம் கைகூடுவதே அல்லாது படிப்பால், விவாதத்தால், விரிவுரையால் மற்ற உபாயங்களால் எல்லாம் கடவுளைக் கண்டுகொள்ள முடியாது. இதனால் தான்,

இயல்வேதா கமங்கள்புரா ணங்கள்இதி காசம்
இவைமுதலா இந்திரசா லங்கடையா உரைப்பார்
மயலொருநூல் மாத்திரமே சாலமென அறிந்தார்
மகனேநீ நூலனைத்தும் சாலமென அறிக

செயலனைத்தும் அருள்ஒளியாற் காண்கஎன எனக்கே
திருவுளம்பற் றியஞான தேசிகமா மணியே
அயலறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற
ஆடுகின்ற அரசேஎன் அலங்கலணிந் தருளே''.

ஆடல் அரசராகிய அருட் பெருஞ் ஜோதியை, அதன் மெய் அருளாலே, சத் விசாரத்தால சார்ந்து நின்று அன்பாலே, ஜீவ தயவாலே உளம் உருகிடும் போது தான், உண்டாகின்ற அக அனுபவமே, அருள் ஒளிக் காட்சியால் பெறப்படும் அனுபவமாம். உலகறி வேதாகமங்கள் உண்மை அல்ல: அந்த வேதாகமத் திற்கு ஆதாரமாகிய ஒன்று எதுவோ அதுவே அருள் மெய்ப் பொருள்: அது அகமிருந்து புறத்தே தோன் றியுள்ள யாவற்றிற்கும் காரணமாய் இருக்கின் றதாம். புறத்தன எல்லாம், தோற்றமாற்ற மறைவு ஆகிய மாயா மயமானவையே ஆம்.

இப்படி அருட் ஜோதிபதி ஒருவரே அகத்தில் ஒரு படித்தாய் இருக்க, புறத்தில் அனந்த வண்ண பேத தோற்றங் கொண்டுள்ளதால், இப்போது, அது ஒன்றே ஈரியல்போடு, எதுவுமாய், எவருமாய், நாம் ஒவ்வொருவருமாய் விளங்கிக்கொண்டிருப்பது உண்மையாகும். இவ் வனுபவத்தில் உள்ள மனிதன் (உண்மையில் ஒன்ருன கடவுள் தான்) எங்கும், அயலறியாது, எங்கும் தானுய் வெளிப்பட்டுத் திகழ் வதை யுணர முடிகின்றதாம். இதுதான் அயலறியா அறிவு என்பதாம்.

இந்த ஒன்ருன இறை அருட் ஜோதியைக் கலந்து நிற்கும் ஒருவன், அருள் அனுபவி ஆவான்.

இவனுக்கு வேதங்களின் விளைவும், ஆகமங்களின் விதி முறைகளும், புராணங்களின் கட்டுக் கோப்பும், இதிகாசங்களின் இலட்சியங்களும் இவை இவை என நன்கு புலனுகும். இவனது வாழ்க்கை அருள் ஒளியால் நடைபெறும். அருள்மயமாகாமல் மருள் மயக்கில் இருந்துகொண்டே, வேதாகம பண்டிதனுய், புராண விரிவுரை வல்லுனராய், இதிகாச கதாப் பிரசங்கியாய் விளங்குபவர், அருள் அனுபவம் இன்மையால் வீண் போவது இயல்பே.

நம் வள்ளல் அடிகள் அருள் ஒளியை யுள்ளத்து உணர்விலே கொண்டு விளங்கினதால், எல்லா மறைப்புகளையும் தவிர்த்துக் கொண்டு உள்ளதை யுள்ளபடி அறிந்து கொண்டதோடு வாழ்விலே என்றும் தழைத்தோங்கவே வேண்டினுர். உண்மையைச் சரியாக புரிந்து கொண்ட பின், மறுபடியும் பொய்ந்நெறிகளிலே பற்று கொள்வார்களா, அவற்றில் செல்வார்களா, மாட்டார்கள். வீண் போது கழிக்கவும் விரும்பார்கள்: விரைவிலே இறைவனோடு இரண்டற இருந்து கொண்டு, எவர்க்கும் அவ் இறை இன்ப வாழ்வு ஏற்பட இயன்ற உதவி செய்து கொண்டிருப்பதே இவருடைய திருவுள்ளம் ஆகும். இதுவே, இவர் ஆண்டவரிடத்து வேண்டுகின்ற சித்து விளையாட்டு.

சுத்த சன்மார்க்கி, தெய்வ நிறை வாழ்வு பெற்று, நித்திய ஆனந்தமாய் செயலொடு திகழ்ந்து கொண்டிருப்பதே லட்சியமாய் கொண்டவனுவான். மற்றவர்கள் தான், மந்திர தந்திர மாயாஜால

இவனுக்கு வேதங்களின் விளைவும், ஆகமங்களின் விதி முறைகளும், புராணங்களின் கட்டுக் கோப்பும், இதிகாசங்களின் இலட்சியங்களும் இவை இவை என நன்கு புலனுகும். இவனது வாழ்க்கை அருள் ஒளியால் நடைபெறும். அருள்மயமாகாமல் மருள் மயக்கில் இருந்துகொண்டே, வேதாகம பண்டிதனுய், புராண விரிவுரை வல்லுனராய், இதிகாச கதாப் பிரசங்கியாய் விளங்குபவர், அருள் அநுபவம் இன்மையால் வீண் போவது இயல்பே.

நம் வள்ளல் அடிகள் அருள் ஒளியை யுள்ளத்து உணர்விலே கொண்டு விளங்கினதால், எல்லா மறைப்புகளையும் தவிர்த்துக் கொண்டு உள்ளதை யுள்ளபடி அறிந்து கொண்டதோடு வாழ்விலே என்றும் தழைத்தோங்கவே வேண்டினுர். உண்மை யைச் சரியாக புரிந்து கொண்ட பின், மறுபடியும் பொய்ந்நெறிகளிலே பற்று கொள்வார்களா, அவற்றில் செல்வார்களா, மாட்டார்கள். வீண் போது கழிக்கவும் விரும்பார்கள்: விரைவிலே இறைவனேடு இரண்டற இருந்து கொண்டு, எவர்க்கும் அவ் இறை இன்ப வாழ்வு ஏற்பட இயன்ற உதவி செய்து கொண்டிருப்பதே இவருடைய திருவுள்ளம் ஆகும். இதுவே, இவர் ஆண்டவரிடத்து வேண்டுகின்ற சித்து விளையாட்டு.

சுத்த சன்மார்க்கி, தெய்வு நிறை வாழ்வு பெற்று, நித்திய ஆனந்தமாய் செயலொடு திகழ்ந்து கொண்டிருப்பதே லட்சியமாய் கொண்டவனுவான். மற்றவர்கள் தான், மந்திர தந்திர மாயாஜால

மனோவசியம் முதலானவும், யோக ஞான அற்புதானந்த மகா சித்துச் செயல்களும் பெற முயன்றும், ஓரளவு பெற்று இருந்தும், முடிவில் ஆதி அருட் ஜோதியிலே மறைந்து கரைந்து சமாதி நிலை எய்தி விடுகிறார்கள். இன்றோ நம் சுத்த சன்மார்க்கத் தலைவர், கடவுட் கலப்பில் மறையுறாது, கடவுள் தானே தன் இயல் உண்மை அறிவின்ப அனுபவத்தை எல்லாம், இவர் வடிவில் இருந்து உலகம் கண்டு உய்ய உதவிக் கொண்டுள்ளார்.

அருட் பெருஞ் ஜோதிக் கடவுள், மனிதனுக்கு, அற்புத சித்தி வல்லப சக்தியை வழங்கி, மக்கள் சமுதாயத்தை வியக்கச் செய்யவும், மயக்கச் செய்யவும் விரும்பவில்லை. அப்படிப் பெறும் அற்புதச் சக்தி சித்திகள் எல்லாம் அற்பமாய், வேண்டக்கூடா தனவாய் தோற்றுகின்றது சுத்த அருட் ஜோதி முன்னிலையிலே. ஆனால் இதுகாறும் பிழைத்துக் கொண்டுள்ள புலனெறியுலகம் புற மாயா மயக்கச் சித்திச் செயல்களையே வியந்தும் போற்றிக் கொண்டும் உள்ளதாம். அப்படிப்பட்ட வியத்தகு சித்திகளில் மயங்காதாரும் கூட, புலன் இன்ப வாழ்வையே இச்சித்து ஏற்றோ, வெறுத்து ஒதுங்கிச் சென்றோ, உண்மை கொண்டு உயரின்ப வாழ்வில் நிலை கொள்ளாது போகின்றது திருவருட் சம்மதமல்ல.

இறைமயமாகி, இறவா இன்பில் என்றும் தழைத் திலங்கும் பெருநிலை பெறுவதே நம் வள்ளல் விழைந்த தீதற்ற அனைத்தும் வல்லசித்தாடல் ஆகும்.

புற உலகம் கண்டிருந்த இந்த ஞான சித்தர் உயிர் இரக்கம் மிக உடையவர். அந்தப் பேரிரக்கம்தான் பிறர் படும் துன்பங்களைக் கண்டும், கேட்டும் உளம் மிக நெகிழ்ந்து அருள் ஆண்டவரிடம் முறை இட்ட போதெல்லம், அத் திருவருட் சக்தியே பல சித்திகளை நிகழ்த்தித் துன்புற்ரோரை இன்படையச் செய்திருக்கின்றது உண்மையே. இவையொன்றும் இச்சையாலோ, உலகு மதித்துப் புகழ்ந்து போற்றவேண்டும் என்றே செய்யப்பட்டன அல்லவாகும். ஆகையால் இவர்தம் அருட் சித்துச் செயலால் இவரது உள்ளத்தில் ஆணவ அகங்காரமற்ற அருள் ஒளியையே, பெருக்கி முடிவில் அருட் பிரகாசச் சித்தி வடிவாய் என்றென்றும் விளங்கும்படி செய்துவிட்டுள்ளது.

உலகவரால், அன்றும், இன்றும் போற்றிக் கொள்ளப்படுகின்ற எத்தனையோ சித்தர்கள், மகான்கள், யோகியர்கள் எல்லாம், இறைமயமாய் என்றும் இருந்து கொண்டு, ஆம் உலகில் மரணமில்லாது இருந்து கொண்டு வாழும் பெருஞ் சித்தி பெறவில்லையே என்ருல், அது சுத்த சன்மார்க்கத்தில் தான் வெளியாக்கப்படுவது திருவுளச் சம்மதமாய் இருந்து, அந்நெறிக்கு முதல்வராகிய நம் அருட் பிரகாசர் மூலம் உலகறிய வந்துவிட்டுள்ளதாம். இனி இந்த சித்திப் பேறே உலகெல்லாம் போற்றிக் கொள்ள உள்ளதாம்.

சுத்த சன்மார்க்க அருட் ஜோதி உதயமாகியும் அபக்குவர்கள் அகவானில் இன்னும் உள் உதயமாகாத காரணத்தால், பழமையிற் பற்றும், மயக்கமும்

கொண்ட பலரும், அற்ப அற்புத சித்திகளையே மதித்து, அகங்களித்து இருந்து வீண் போகக் காண்கின்றோம். வள்ளலே உள்ளும் புறமும் இருந்து அருட் பக்குவம் வருவித்துக் கொண்டிருக்கின்றதால், அதி விரைவில், காலத்தே சுத்த நெறியினைச் சூழ்ந்துகொள்ளும் உலகம்: நல் விளைவும் பயனும் காணலாகும்.

(9)

**கலையுறைத்த கற்பனையே நிலையெனக்கொண் டாடும்**
**கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக**
**மலைவருசன் மார்க்கம்ஒன்றே நிலைபெறஎவ் வுலகும்**
**வாழ்ந்தோங்கக் கருதிஅருள் வழங்கினைஎன் றனக்கே**
**உலைவரும்இப் பொழுதேநற் றருணமென நீயே**
**உணர்த்தினைவந் தணைந்தருள்வாய் உண்மையுரைத் தவனே**
**சிலைநிகர்வன் மனங்கரைத்துத் திருஅமுதம் அளித்தோய்**
**சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.**

(விளக்கம்) இந்த உலகில், கால தத்துவம் எவ்வளவு வேகமாக, ஒரு கணப்பொழுதும் நில்லாமல் ஓடிக் கொண்டே இருக்கிறது! அப்படி ஒரு கணம் என்று சொல்லுகிறோமே, அதாவது நிலைத்த ஒன்றாய் முழுத் தோற்றங்கொண்டு விளங்குகிறதா என்றால், இல்லை என்று தான் கூற வேண்டும். அதாவது ஒரு கணத்தின் உட்கூறாக எத்தனையோ ஆயிரம் ஆயிரம் பகுதி நேரம் நிலையற்று ஓடிக்கொண்டே இருக்கின்றனவாம்! இந்த அரிய காலதத்துவத்திற்கு சற்றும் கட்டுப்படாமல் எக்காலும் நிலைத்து உள்ளவர், காலாதீதர் ஆகிய நம் அருட் ஜோதிப் பெரும்பதி யாவார். அவருடைய அருள் பெற்று அவரை

தாண்டி விட்டால் கால எல்லையைக் கடந்து விளங்கலாம் என்பது உண்மையாம்.

அப்படிக் காலாதீதநிலை பெற்றுக் கழிவிலாது வாழற்காம் வாய்ப்பு இது சமயம் தான் வெளியாகியுள்ளது. ஆகையால் இந்த உடல் உலைந்து கெட்டு அழிந்து ஒழியுமுன் திருவருளைப் பெற்று உய்வதற்கு உரிய தருணம் என, அடிகளார்க்கு உணர்த்தினார் ஆண்டவர். 'நற்றருணம் என நீயே உணர்த்தினை, உண்மையுரைத்தவனே (இப்போதே) வந்து அணைந்து அருள்வாய்,' என வேண்டுகின்றார்.

அப்படி வேண்டிய போது, இவரது, கல் நெஞ்சு கரைக்கப்பட்டுவிட்டதாம்: அருள் அமுதம் அளிக்கப் பட்டும் விட்டதாம். கருங் கற் பாறை போன்ற கடின சித்தம் கரைந்தால் தான் அருளமுதம் பெற முடியுமாம். மனம் அபக்குவத்தில் கடினமாய் இருப்பதால் கல் மனம் அல்லது கல்நெஞ்சு எனப்படுகின்றது. உண்மையில், ஆண்டவர் திருவருளே நம்மனமாக இருப்பதால், அது 'அருட் பெருஞ் ஜோதி தனிப் பெருங் கருணை,'யாம், பதின்மூன்று, ஆகையால் இசைந்து, அருள் நிலை உண்மையைக் காட்டுகின்றதாம். பக்குவம் உறும் போது அந்தக் கல்மனம் அருள் அமுத ஜோதி மயமாக மாற்றப்பட்டு விடுவதாம். மனம் இறக்க வேண்டும் என வேண்டினார் முன்னோர், இவரோ மனம் இருக்க வேண்டும், ஆனால் அது அமுத ஜோதியாக மாறி இருக்க வேண்டும் என்கின்றார் மரணம் இல்லா வாழ்வு பெற்ற வள்ளல். வாழி விரும்பாக, பிறவியே

எடாது இருக்க வேண்டினேர் தான் இறக்க வேண்டும் என்று வேண்டிப் பெற்று மடிவுற்றுப் போனூர்கள்.

மனத்தின் அருள் உண்மையை அறியாதார், மனிதப் பிறப்பின் மகிமையை உள்ளபடி அறியாதாரே, அருளால் வாழாது, மருளால் மடிந்தனர் என இன்று நாம் அறிகின்ருேம். மனம், அருள் மயமான அமுத ஜோதி வடிவுற்று விளங்குதலே, சகல கேவல மற்ற, நினைப்பு மறப்பு அற்ற, பிறப்பு இறப்பு அற்ற நித்திய நிறைவுற்ற அனுபவ வாழ்வு நிலை ஆகும். அருட் பெரும்பதி, வள்ளலாரின்கல் மனத்தைக் கரைத்து திரு அமுதம் அளித்து விட்டார் என்பது நான்காம் அடியில் காண்கின்ருேம்.

இந்த அருட் பேரனுபவ நிலை நம் பெருமானூர்க்கு எதற்கு வழங்கினூர் என்ருல், அவர் மட்டும் ஆனந்த பரவசத்தில் அமிழ்ந்து ஆழ்ந்து கிடத்தற்கு அல்லவாம். உலகத்தாரை எல்லாம் பக்குவப்படுத்தி அம் மேனிலையை அடைந்து உய்யச் செய்வதற்கே ஆம். இக் குறிப்பு தான் முதல் ஈரடிகளில் நன்கு வெளியாக்கப் பெற்றுள்ளது.

கலையுரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கம் எல்லாம் மண் மூடிப் போகச் செய்தல் வேண்டும் என்பது தான் கடவுட் சித்தமும், இவரது திருவுள்ளமும் ஆம். இதுகாறும் உலகம் அருட் பெருஞ் ஜோதி உண்மை நிலையை அறியாது, மாயா தத்துவ சாலக் கற்பனு கலைகளில்

மயங்கிக் களித்திருந்து இறுமாந்து அழிந்து கொண் டிருந்தது. எவ்வளவோ காலமாக இப்படி பழகிப் போய் நெடுநாளைய வழக்கமாகிவிட்டிருக்கும் வாழ்க்கை முறையை மாற்றி அமைப்பது மிகக் கடினம் தான். அம்முறை சரி அல்ல, தவருனது என்று எவ்வளவுதான் சொன்னாலும், அப்படித் தவருனவையே என்று ஓரளவு தெரிந்து கொண்டா லும் கூட, அவற்றை விட்டு மெய்ந்நெறிக்கு வர இலேசிலே இசையாதவர்களாய் இருக்கிருர்கள் இந்நாள் மக்கள்.

நம் இராமலிங்க வள்ளல், இந்த மக்களின், மிகத் தடிப்பேறிக் கல்லாய் இறுகிப் போன உள்ளங் களை, மென்மையுடையதாக்கி இளகச் செய்து ஒளி நெறியில் உண்மை கண்டு வாழ்வை முற்றும் புதுப் பித்துக்கொள்ளச் செய்ய முயன்ருர். இதற்காகவே, திருவருளைப் பெற்ருர், அவ்வருளால், தெளிவான சுத்த சன்மார்க்கத்தையும் பெற்ருர். இந்நெறி ஒன்றே உலக முழுமைக்கும் நிலையான இன்ப வாழ் வைக் கொண்டு வருவதாய் இருக்கின்றது. சுற்நரைச் சுத்த சன்மார்க்கிகளாக ஆக்கிவிடலாம் என, எவ்வளவு ஆசைப்பட்டார் முதலில். ஆனல் ஒருவர்கூட தன் வழிக்கு வராதது கண்டு மிகப் பரிதாபப்பட்டார். எதிர்பார்த்தபடி உலகம் அவ்வளவு சீக்கிரம் பக்குவப்பட்டுவிடாது என நாளடைவிலே கண்டு தான் தனது முயற்சியை மாற்றிக் கொண்டுவிட்டார்.

இந்த உலக மக்களின் கண்மூடிப் பழக்க வழக்கம் இப்போதைக்கு நீங்கிவிடப் போவதில்லை. அருள் அற்புதத்தால் திடீர் என மாற்றப்படுவது கூடாது, அது திருவுளச் சம்மதமல்ல, கொஞ்சம் கொஞ்சமாகப் படிப்படியாகத் தான், தினசரி வாழ்க்கையின் மூலம் தான் பக்குவம் உண்டாகும் என்பதைக் கண்டு கொண்டார். அப்படிப் பக்குவம் வருவிக்கப் புறத்திலிருந்து நேரடியாகச் சொல்லியோ, தந்திர உபாய நெறிகளாலோ, சுத்த தயவுடையவர்களாக எல்லோரையும் மாற்றிவிட முடியாது. அருளால் அகமிருந்து சிறிது சிறிதாக உணரவும், தெளிவுறவும் செய்து தன் னெறிக்குக் கொண்டுவரத் திட்டமிட்டுப் புரிந்து கொண்டுள்ளார்.

இந்த அருட் பெருஞ் செயலின் விளைவு, சுத்த சன்மார்க்க வெளியீடு முதலில் கொஞ்சம் கொஞ்சமாகத் தோன்றியும் தோன்றாததாய் இருந்து வரவர பெருக்கமும் விரைவும் அடைந்துப் பின் அதி விரைவில் எங்கும் நிரம்பி நிறை பயன் வழங்கப் போவது உண்மை. இது ஆண்டவரின் அருள் ஆணை.

(10)

திருத்தகுமோர் தருணமிதில் திருக்கதவம் திறந்தே
திருவருட்பே ரொளிகாட்டித் திருஅமுதம் ஊட்டி
கருத்துமகிழந் தென்உடம்பிற் கலந்துளத்திற் கலந்து
களித்துயிரிற் கலந்தறிவிற் கலந்துலகம் அனைத்தும்
உருத்தகவே அடங்குகின்ற ஊழிதொறும் பிரியா(து)
ஒன்றாகிக் காலவரை உரைப்பவெலாங் கடந்தே

திருத்தியொடு விளங்கிஅருள் ஆடல்செய வேண்டும்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

(விளக்கம்) இம்முடிவான செய்யுளிலே மிக முக்கியமான வேண்டுகையை முடிவாக வெளியிடுகின்றார்.

திருத்தியோடு, திருப்தியோடு என்று சாதாரணமாகப் பொருள் கூறி விடுவர் நூலறிபுலவோர்: உள நிறைவோடு என விளக்கியும் கூறுவர். இவர்களின் சொற்பொருளும், விளைவாம் பயனும் குறுகியவையே ஆம். நம்பெருமானின் அருண்மாண்ணிலை அரிவரிய ஒன்றாகும். அவர் பெற்ற திருத்தி நிலை, இடமும் காலமும் கடந்து திரிதேக சித்தியோடு என்றென்றும், தன் அருட் பெருஞ் செயலால் ஆருயிர்கட்கெல்லாம் மெய் இன்ப வாழ்வு உண்டாக உதவிக் கொண்டிருத்தலாகும்.

இது தான் இவரது முடிந்த குறிக்கோள். இதனைத்தான் ஈற்றடியில் வைத்துள்ளார். இம்முடிந்த அனுபவப் பேறு சித்திப்பதற்குமுன் நிகழும் அனுபவ நிலைகளையே, முன் மூவடிகளிலும் வரிசைப்படி கூறியுள்ளார். அவற்றைக் கீழ் காண்போம்.

திருத்தகுமோர் தருணம் - திரு என்பதற்கு, இதுவரை நாம் கண்டு கொண்ட பொருள், மெய்ப்பொருளைக்காட்டி நம்மை அத்தோடு கூட்டி வைத்து வாழச் செய்யவில்லை! நம் சுத்த நெறியில் திரு என்பதற்குப் பொருள் அருள் ஆம். 'திரு அருள்' என இணைத்துச் சொல்லும்போது, அழுத்தம் திருத்தமாக உண்மை

யை விளக்கும் மீமிசைச் சொல்லாகக் கொள்ளக் கூடும். இந்த மனிதப் பிறப்பிலே, கடவுள் உண்மை ஒளி, சிரநடு இருந்து ஆள்கின்றதை இன்று உணர்த் தப் பெற்றுள்ளோம். இந்த இறை ஒளி, த்இ-ர்உ ஆகக் கடவுளின் இயல் உண்மை செயல் வண்ணம் வெளிப்படுத்திக் கொண்டு தலை நடுவுள் விளங்கு வதைக் குறிப்பதாம். இக்குறிப்பைக் கண்டு கொள் ளற்கே அகர உடலும், ருகர உயிரும், ளகர மெய் ஞான ஒளியும் கூடி அருள் ஆகித் திகழ்கின்றதாம். இதனுல்தான் திரு என்ற சொல்லுக்குப் பொருள் அருள் எனக் கொள்ள நேருகின்றது.

இத்திருவால், திரிதேக சித்தி பெறுவதற்குரிய சமயம் இதுவாக இருக்கின்றது. இத்தருணத்தைப் பயன்படுத்திக்கொள்ளவே, சத்திய ஞான சபைமுன் சார்ந்து நின்று, திருக்கதவம் திறக்கும்படி வேண்டப் படுகின்றது. புறக் காட்சியை வடலூர் சென்று, தைப் பூசத்தன்று, திருக்கதவம் திறக்கப் பெற்று, திரைகளும் விலக்கப் பெற்று ஜோதியைக் காணலாம். அக உண்மைக் காட்சினைக் கண்டு, அருளால் அருட் பெருஞ் ஜோதி அனுபவம் பெற வேண்டுவது திருவருள் ஆணை ஆகும்.

ஒருமையும் தயவும் கொண்டு, சுத்த சத் விசார வசத்தராய்ப் புருவ நடு விருந்து வேண்டிக் கொண் டிருந்தால், அருள் ஞான பக்குவம் உண்டாம் போது நுதற்கண்ணுகிய திருக்கதவம் திறக்கப்படும். நாளடைவில் மாயா சக்தித் திரைகளாம் மறைப்புகள்

விளங்கிட அருட் ஜோதிக் காட்சி அக ஞான சபையிலே கண்டு கொள்ளலாம். வள்ளலார் இப்படி உள்ளொளியைக் கண்டுகொண்டார். இக் காட்சியைக் கண்டதோடு, அருளால், ஆணவ மல ஒழிவிலே அதுதானும் அனுபவ நிலையுற்றார். இது தான் அருள் அமுதம் ஊட்டப்பெற்று விளங்கினதாம்.

இந்த அக நிலையில், 'தான்,' போய் அதுவாகி நின்று அனுபவிப்பதே மெய் இன்பமாகும். இதனை முன் அனுபவிகள் பலரும் பெற்று இன்புற்றிருந்ததும் உண்டு. ஆனால், அவ்வின்பமே முடிந்த நிலையாகக் கருதி அதிலேயே ஆழ்ந்து அடங்கிப் போயினர் ஆன்றோர். அப்படி அகம் அழுந்திப் போனதால், உலகை மறந்து, உடலை மறந்து, உணர்வு மறந்து உயிர் ஒடுங்கி யாவையும் நீத்து சூனியமாகிப் போயினர். அந்த ஆன்மாவுக்கு மேற் பிறப்பு விதிப்படி சார்வதாம். இவ்வுண்மையை அறியாதாரே, தூல தேக மறைவுக்குப் பின் உலவும் சூக்கும ஆவி உருவைப் போற்றி, உலகியற் சிறு பயன் அடைந்து மகிழ்வர். அதனால் அருள் இன்ப வாழ்வு அடைய முடியாது. அருட் ஜோதி இடம் இருந்து தான், மெய் இன்ப வாழ்வு பெற வேண்டும். ஆகவே, தூல, சூக்கும வடிவங்களையும் அவற்றின் சக்திச் செயல்களிலும் பற்று வைக்காது, நேரடியாகக் காரண ஜோதி வடிவாகிய உள்வளர் கடவுள் ஆன்ம வடிவைச் சார்ந்து தான் மெய் இன்பம், பெற வேண்டியுள்ளது.

ஆனால் அந்த ஆன்ம சுகம் நிலைத்த

அனுபவத்துடன் விளங்கிக் கொண்டே இருக்க வேண்டுமெனின், சூழ உள்ள உயிர் உடம்பும் அழியாது, அறிவு உணர்வு கெடாது விளங்கிக் கொண்டே இருக்க வேண்டுவது அவசியமாகும். இதற்கு அந்த அகம் ஒளிர் அருட் ஜோதி அனகமாக விரிந்து உடலிற் கலந்து, உளத்திற் கலந்து, உயிரிற் கலந்து, அறிவிற் கலந்து களித்து கருத்து மகிழ்வுற்றிருக்க வேண்டும் என்பதையே இரண்டாம் அடியிற் காண்கின்றோம். அப்படி தன்னில் கலந்து கொண்ட அருட் ஜோதியே புறஉலகப் பெருவெளி முற்றும் நிரம்பி ஊழூழி காலம் உலவாதிருக்கக் காணலாகும்.

அகண்ட பெருவெளியில் அனாதி நித்தியமாய் உள்ளது அருட் பெருஞ் ஜோதி. அப்படி இருந்து கொண்டு தான் அனைத்துலகப் பொருள்களையும் ஆற்றல்களையும் தோற்றுவித்தும், விளங்கச் செய்தும் அடங்கி ஒழியச் செய்தும் கொண்டுள்ளது அவ் அருட் பெருஞ் ஜோதி. இவ்வுண்மைக் காட்சியைத் தான் சுத்த சன்மார்க்கி அனுபவ பூர்வமாய்க் கண்டு உலவாது என்றென்றும் விளங்குபவனாகின்றான். இக் கருத்தே மூன்றாம் அடியில் குறிக்கப்பட்டுள்ளதாம்,

இப்படி திரிதேக சித்தியோடு இறவா இன்ப வாழ்வில் திகழ்ந்து கொண்டு இருப்பது தானே ஒருவனுக்கு நிறை வாழ்வு ஆகும். இது தான் "திருத்தியொடு விளங்கும் அருள் ஆடல்" என ஈற்றடியில் இசைக்கப் பெற்றுள்ளது. ஆகவே,

இந்தத் திருக்கதவம் திறத்தல்,'' என்ற தலைப்பினுல் சுட்டப்படுவது, ஒருவன் இப்பிறப்பில் திருவருளால், அருள் ஞானக் கண் திறக்கப் பெற்று, மறைப்பை எல்லாம் தவிர்த்துக் கொண்டு, உள்ளொளியைக் கண்டு கலந்து அதுவாகி நின்று உலகெலாம் உலவா இன்ப வாழ்வில் தழைத்தோங்கச் செய்து கொண்டு என்றும் ஆனந்தமாய் வாழ்ந்து கொண்டிருத்தலாகும். இதுவே முடிவற்ற முடிவு: நிறைவு: தயவு.

" பாலும் கொடுத்தான் பதிதிறக்கும் ஓர்திறவு
கோலும் கொடுத்தான் குணம்கொடுத்தான் – காலும்
தலையும் அறியும் தரமும் கொடுத்தான்
நிலையும் கொடுத்தான் நிறைந்து.''

(திரு அருட்பா)

தாரமும் என்பதே தயவும் ஆக இன்று வழங்கப் பெற்றுள்ளோம்.

நிறைக தயவு.

## ஆசிரியரால் வெளியிடப்பட்ட பிற நூல்கள்

| | | ரூ. |
|---|---|---|
| 1) | அருள் விளக்க மாலை உரை | 10-00 |
| 2) | சத்திய ஞான சபை | 6-00 |
| 3) | இங்கித மாலை உரை | 15-00 |
| 4) | திருப்பள்ளி எழுச்சி | 5-00 |
| 5) | அட்டகம் உரை | 3-00 |
| 6) | அருட்பெருஞ்ஜோதி அகவல்,<br>திருவடிப்புகழ்ச்சி மூலம் | 1-00 |
| 7) | மாயை | 4-00 |
| 8) | தயா விளக்க மாலை | 2-00 |
| 9) | அருளே சிலுவை | 1-00 |
| 10) | தயவுப் பாக்கள் [1700]<br>மூலம் மட்டும் | 25-00 |
| 11) | தயா பெரும் பழம் | [அச்சில்] |